## **DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure ) Crl.Misc.39

| | | |
|---|---|---|
| IN THE COURT OF | : | **II ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, THANJAVUR** |
| Case No. | : | **SC 73/2020** |
| Name of Deponent | : | **PW 1 சண்முகவேல்** |
| Father's Name /Husband Name | : | பால்ராஜ் |
| Village | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Calling | : | |
| Age | : | **43** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 01.11.2022**

**அரசு தரப்பில் முதல் விசாரணை** : -

நான் தற்போது தென்னங்குடி காளியம்மன் கோயில் தெருவில் வசிக்கிறேன். நான் சம்பவத்தின்போது தென்பெரம்பூர் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தேன். தற்போது ராஜேந்திரம் கிராம நிர்வாக அலுவலராக பணியில் உள்ளேன். 12.06.2019 ம் தேதி காலை 6.00 மணிக்கு என்னுடைய உதவியாளர் போன் செய்து அடையாளம் தெரியாத நபரின் பிரேதம் வெட்டாறு ஆறில் கிடப்பதாக சொன்னார். நான் போய் பார்த்தேன். அது குறித்து நடுக்காவேரி காவல்நிலையத்திற்கும், வருவாய் ஆய்வாளருக்கும், தாசில்தாருக்கும் தகவல் தெரிவித்தேன். வெட்டாற்று கரைக்கு போலிசார் வந்துவிட்டார்கள். காவல் துறையினர் ஆம்புலன்ஸ் மூலமாக பிரேதத்தை தமக மருத்துவமனைக்கு எடுத்து சென்றுவிட்டார்கள். அதன்பிறகு நான் காவல்நிலையம் சென்று அறிக்கை கொடுத்தேன். என்னிடம் காட்டப்படுவது நான் கொடுத்த அறிக்கை தான் அது நான் எழுதியதுதான். நான் கொடுத்த அறிக்கை **அசாஆ 1.** போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**7 ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் எழுத்து மூலமாக புகார் கொடுப்பதற்கு முன்பே போலிசார் பிரேதத்தை எடுத்து சென்றுவிட்டார்கள் என்றால் சரிதான். அவ்வாறான அறிக்கைக்கு ஒரு நகல் வட்டாட்சியர் அலுவலகத்திற்கும், ஒரு நகல் எங்கள் கோப்பிற்கும் தயார் செய்வோம். இந்த வழக்கில் வட்டாட்சியர் அலுவலகத்திற்கும் கோப்பிற்கும் நகல்

எடுக்கவில்லை. முதலில் போலிசாருக்கு தகவல் சொல்லிவிட்டு பிறகு வட்டாட்சியருக்கு தகவல் சொன்னேன். நான் சம்பவ இடத்திற்-கு காலை 6.45 மணிக்கு போனேன். நான் சம்பவ இடத்திற்கு போவதற்குமுன்பே தகவல் சொல்லிவிட்டு போனேன். நான் போகும் நேரத்திலேயே வட்டாட்சியரும் போலிசாரும் வந்துவிட்டார்கள். நான் சம்பவ இடத்திற்கு போவதற்கு முன்பே வட்டாட்சியர் அங்கு வந்துவிட்டாரா என்றால் இல்லை. வட்டாட்சியர், வருவாய் ஆய்வாளர் மற்றும் கிராம உதவியாளர் ஆகியோர் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார்கள். கிராமத்து நபர்கள் சொன்னதன் அடிப்படையில் கிராம உதவியாளருக்கு தகவல் தெரிந்தது. கிராம உதவியாளர் சம்பவ இடம் சென்று பார்ப்பதற்கு முன்பே எனக்கு போன் செய்து நான் கிளம்பி வந்துகொண்டிருக்கிறேன், நீங்களும் வாருங்கள் என்றார். அடையாளம் தெரியாத பிரேதம் கிடந்தால் கிராம நிர்வாக அலுவலர் என்னென்ன நடைமுறைகளை பின்பற்ற வேண்டுமோ அவற்றை நான் பின்பற்ற வில்லை என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளவேண்டிய சாட்சியம் இல்லை என்றால் சரியல்ல.

மற்ற எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலையாகததால் குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/-)A. மலர்விழி,

2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.